18.3.2014 DINAMALAR.

# ‘தென்னை வளர்ப்புக்கு முறையான பயிற்சி அவசியம்’

உடுமலை ● மார்ச் 18–

''தென்னை விவசாயிகள் இழப்பை தடுக்க, தென்னை வளர்ப்பு குறித்த முறையான பயிற்சி பெறுவது அவசியம்,'' என, உடுமலை தென்னை வளர்ப்போர் வளர்ச்சி சங்கத் தலைவர் பெரியநாயகம் பேசினார்.



உடுமலை ராஜாவூரில், தென்னை வளர்ச்சி வாரியம் சார்பில், விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு நேற்று துவங்கியது. இதில். தென்னை வளர்ச்சி வாரிய சங்க தலைவர் பெரியநாயகம் பேசினார்.

உடுமலை தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் சினேகாலயா விவசாய மேலாண்மை நிறுவனம் சார்பில், தென்னை விவசாயிகளுக்கு, தென்னை வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம், நேற்று துவங்கியது; வரும் 22ல் நிறைவடைகிறது.

இதன் துவக்க விழா, உடுமலை அருகே பெரியகோட்டையில் நேற்று நடந்தது. சினேகாலயா விவசாய மேலாண்மை நிறுவன தலைவர் செல்வராஜ் வரவேற்றார்.

உடுமலை, தென்னை வளர்ப்போர் வளர்ச்சி சங்கத் தலைவர் பெரியநாயகம் பேசியதாவது: தென்னை உற்பத்தியை பெருக்குவதும், மதிப்புக் கூட்டு பொருளாக மாற்றுவதுமே இப்பயிற்சியின் நோக்கம். தென்னையில் இலை கருகல் மற்றும் கேரள வாடல் நோய் தற்போது அதிகரித்து வருகிறது. இதனால், தென்னை உற்பத்தி அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டில் குடிமங்கலம் பகுதியில் இலை கருகல் நோயால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டன. தென்னை விவசாயிகளுக்கு பெருமளவில் இழப்பு ஏற்பட்டது. இதற்கு காரணம் விவசாயிகளிடம் தென்னை வளர்ப்பு குறித்த முறையான பயிற்சி இல்லாததுதான்.

விவசாயிகள் தென்னை வளர்ப்பில் மேற்கொள்ளப்படும் நுண்ணூட்டம், பேரூட்டம் மற்றும் இடையூட்டம் உள்ளிட்டவற்றை உரிய நேரம், தேவையான நாட்களில் முறையாக பயன்படுத்த வேண்டும். பூச்சிக் கொல்லி மருந்துகளை குறிப்பிட்ட அளவுகளில் பயன்படுத்தி தென்னையின் வேர்கட்டுகளுக்கு பாய்ச்ச வேண்டும். இதன் மூலம் தென்னை மரங்களில் ஏற்படும் நோய்களை தடுக்கலாம்.

தென்னை உற்பத்தியை மட்டும் பெருக்குவதுடன், அதை மதிப்புக் கூட்டு பொருளாகவும் மாற்றுவதே விவசாயிகளுக்கு உண்மையான நன்மை பயக்கும். தென்னையில் மதிப்புக் கூட்டு பொருட்கள் தயாரிப்பதற்கு தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் மாநில அரசு பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. விவசாயிகள் இதனை முழுமையாக பயன்படுத்த வேண்டும். நீர் மேலாண்மை, உர மேலாண்மையில் அதிகளவு கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு, பெரியநாயகம் பேசினார்.

பயிற்சி முகாம், வரும் 22வரை நடக்கிறது. இதில், தென்னை மரம் வளர்ப்பது, பூச்சியை கட்டுப்படுத்துதல், நீர் மற்றும் உர மேலாண்மை குறித்து, பயிற்சியாளர் மகேஷ் பயிற்சி அளிக்கிறார்.

பயிற்சியின் இறுதியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு மரம் ஏறுவதற்கான நவீன கருவி வழங்கப்படுகிறது. உடுமலை தென்னை வளர்ச்சி வாரிய சங்க உறுப்பினர் சின்னச்சாமி நன்றி கூறினார்.